DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | | | |
|---|---|---|---|
| Name | சோனியா | Village | வாணியம்பாடி |
| Father's Name | அன்பு | Taluk | வாணியம்பாடி |
| Age | 29 | Calling | வாணியம்பாடி தாலுக்கா துணை நிலஅளவையர். |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **08.01.2026**

**O.S. No.70/2018　　　நீ.ம.சா.1　　　03.18 PM – 04.02 PM**

**முதல் விசாரணை**

நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணையின் பேரில் ஆஜர். கடந்த 2022ஆம் வருடம் நான் பணியில் சேர்ந்த போது இந்த வழக்கில் நிலத்தை அளந்து கொடுக்க கோரி அழைப்பாணை வந்தது அதன் படி நான் அளந்தேன். அளந்த பிறகு இந்த வழக்கில் நியமிக்கப்பட்ட நீதிமன்ற ஆணையர் என்னிடம் வரைபடம் கேட்டார் நான் தயார் செய்து கொடுத்தேன். அந்த வரைப்படமானது ஏற்கனவே நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**குறுக்கு விசாரணை– (வாதி தரப்பில்)**

1. நீதிமன்ற ஆணையர் திரு.பாபு அவருடன் நிலத்தை அளந்தபோது, வருவாய்துறை ஆவணங்கள் அடிப்படையிலும் வாதியினுடைய உரிமை ஆவணம் அடிப்படையிலும் அளக்கப்பட்டதா என்றால் சரிதான்.

2. நான் நத்தம் சர்வே எண்.565/30, 31, 29 ஆகியவை நான் அளக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்கள் எந்த காலத்தில் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் நத்தம் நிலவரி திட்டம் அடிப்படையில் செய்யப்பட்டது. மேற்படி நத்தம் நிலவரி திட்டம் 1996, 1997 காலக்கட்டத்தில் அந்த கிராமத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.

3. மேற்படி திட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் பொதுவாக குடியிருப்பு பகுதியில் யார் யார் அனுப்பவத்தில் பத்திரப்படி பொறுத்து அளக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி திட்டத்தின் போது ஆவணத்தில் உள்ள அளவீடுகளின் படியா அல்லது

அனுபவத்தின் இருந்ததன் படியா அளக்கப்பட்டதா என்று என்னால் குறிப்பிட்டு கூறமுடியுமா என்றால் கூறமுடியாது.

4. மேற்படி நத்தம் அளவீடு திட்டம் மூலம் அளக்கப்பட்ட விஸ்தீரணம் தொடர்பாக குடியிருப்பவர்களிடம் இருந்து தொடர்ந்து புகார் வந்துக்கொண்டு இருக்கிறது என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் அளவீடு செய்து நிலத்தின் முந்தைய சர்வே எண் கூறமுடியுமா என்றால் அதுவும் சர்வே எண் 565 தான்.

5. இந்த நத்தம் நிலத்திட்டத்திற்கு முன்பு U.D.R திட்டம் மூலம் உதயேந்திரம் கிராமம் நத்தம் அளவீடு செய்யப்பட்டதா என்றால் சரிதான். அது தொடர்பான காலக்கட்டத்தில் தயார் செய்யப்பட்ட புலவரைபட புத்தகத்தில் பழைய சர்வே எண். 565–ற்கான வரைபடம் புத்தகத்தில் உள்ளதா என்றால் அது சம்மந்தப்பட்ட வரைபடம் U.D.R திட்ட பதிவேட்டில் காணப்படவில்லை.

6. நீதிமன்ற ஆணையர் முன்பு அளவீடு செய்ய அனுப்பப்பட்ட அறிவிப்பில் உள்ள செக்குபந்தி விவரம் அடையாளம் கண்டு தான் அளவீடு செய்யப்பட்டதா என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் சொல்லப்பட்ட கிழக்கு மேற்காக 45 அடி வடக்கு தெற்காக 25 அடி என மொத்தம் 1125 சதுர அடி நிலம் தான் அளவீடு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

7. நத்தம் சர்வே எண். 565/31க்கும் , 565/29க்கும் இடைப்பட்ட பகுதி எந்த சர்வே எண்ணிற்கு உண்டானது என்றால் சர்வே எண்.565/30 மனைக்குண்டா ஒரு பகுதியாகும். நான் அளவீடு செய்யும் போது மேற்படி இடைப்பட்ட பகுதி காலி இடமாகத்தான் இருந்தது என்றால் சரிதான்.

8. மேற்படி வரைபடத்தில் சிவப்பு மையில் குறியீடு செய்யப்பட்டுள்ள பகுதியானது பத்திரத்தின் அடிப்படையில் அளவீடு செய்யப்பட்ட குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சிகப்பு மையினால் 565/29ற்கு மேற்கு புறம் உள்ள 565/30 நிலமும் மற்றும் 565/31ல் அந்த பகுதி நிலமும் அளவீடு செய்யும் காலியாக தான் இருந்தது என்றால் சரிதான்.

9. மேற்படி சிகப்பு மையினால் குறியீடுசெய்யப்பட்ட பகுதியை தான் தனியாக மனைபிரிவாக நத்தம் உட்பிரிவு செய்யப்பட்டு இருக்க வேண்டும் என்று சொன்னால் அது பற்றி என்னால் சொல்ல இயலாது. மேற்படி 565/29ல் கட்டிடம் கட்டி இருந்த

பகுதியில் மட்டும் நத்தம் உட்பிரிவு செய்தபோது, உட்பிரிவாக காட்டப்பட்டது கட்டிடத்தை சுற்றி பூச்சு வேலை செய்வதற்காக விடப்பட்டிருந்த காலி இடத்தை தான் மற்ற சர்வே எண்ணில் தவறாக இணைக்கப்பட்டிருக்கிறது என்றுசொன்னால் அது பற்றி என்னால் கூற இயலாது.

10. நான் அளந்த சமயம் பிரதிவாதி தரப்பில் பத்திரம் ஏதேனும் தாக்கல் செய்திருந்தால் அதன் அடிப்படையிலும் அளந்து குறியிடு செய்திருப்பேன் என்றாலும் அவ்வாறு பிரதிவாதி தரப்பில பத்திரம் எதுவும் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது, நீதிமன்ற ஆணையர் சொன்னதன் அடிப்படையில் தான் நான் அளந்தேன்.

***குறுக்கு விசாரணை முடிவுற்றது.***

பிரதிவாதி தரப்பில் ஆஜர் இல்லை. பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ESHWAR VISWANATHAN

Digitally signed by ESHWAR VISWANATHAN
Date: 2026.01.24 15:02:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி.